# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Term Examination - 2021

FWC

பொருளியல் I
Economics I

Two Hours
Gr -13 (2021)

21 T I

### பகுதி I

01. அனைத்து நாடுகளும் எதிர் நோக்கும் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினை எது?
   1. சூழல் மாசடைதல் பிரச்சினை அதிகரித்தல்.
   2. பொது வளங்கள் மிகையான பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படல்.
   3. எல்லைக்குட்பட்ட வளங்களினால் எல்லையற்ற மனித விருப்பங்களை பூர்த்தி செய்ய முடியாமை.
   4. எல்லைக்குட்பட்ட வளங்களைக் கொண்டு எல்லையற்ற மனித விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படுதல்.
   5. வறியோர் சனத்தொகையின் சதவீதம் அதிகரித்துக் கொண்டு செல்லுதல்.


02. பின்வருவனவற்றுள் நியமக் கூற்றாக அமைவது எது?
   1. மக்களின் வாழ்க்கைச்செலவினை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் அத்தியாவசியப் பண்டங்களுக்கு கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயிக்க வேண்டும்.
   2. வளங்களை பூரணமாக உற்பத்தி செயற்பாட்டில் பயன்படுத்துதல் நிறைதொழில் மட்டமாகும்.
   3. பொருளாதார வளங்களை பொருளியலாளர்கள் நிலம், மூலதனம், உழைப்பு மற்றும் முயற்சி என வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.
   4. மக்களின் வாழ்க்கைச் செலவினை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் அரிசி, மா, சீனி, எரிபொருட்கள் போன்ற அத்தியவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்துள்ளது.
   5. எல்லைநலன், எல்லைச் செலவுகளை அடிப்படையாகக் கொண்டு பொருளியலில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

03. பொருளியலாளர்களால் “மூலதனம்” என்னும் பதத்தினால் சிறப்பாகக் கருதப்படுவது.
   1. வேறு பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யும் பொருட்டு மனிதர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களையாகும்.
   2. பங்குகள் (Stocks) மற்றும் முறிகள் போன்ற வடிவிலான மூலதனத்தை கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்படும் பணமாகும்.
   3. மூலதனத்தை கொள்வனவு செய்யும் நோக்கில் வீட்டுத்துறையால் திரட்டப்படும் சேமிப்புக்களாகும்.
   4. மூலதனத்தைக் கொள்வனவு செய்ய முயற்சியாளரால் பயன்படுத்தப்படும் பணமாகும்.
   5. ஆசையா ஆதனங்கள், காடுகள், உலோகங்கள் மற்றும் கனியவளங்களாகும்.

04. ஒரு திரைப்படத்தைப் பார்க்கச் செல்வதற்கான அமையச் செலவு,
   1. அனுமதிச் சீட்டிற்கான கட்டணத்திற்கு சமனாகும்.
   2. திரைப்படத்தை கண்டுகளிப்பதனால் இழக்கப்படும் காலத்திற்கு சமனாகும்.
   3. அதற்காக இழக்கப்பட்ட அதற்கடுத்த சிறந்த சாத்தியமான தெரிவின் பெறுமதிக்கு சமனாகும்
   4. நண்பர்களுடன் செலவிடப்பட்டிருக்கக்கூடிய காலத்தின் இழப்புக்கு சமனாகும்.
   5. அதற்குப் பதிலாக தொலைக்காட்சியை பார்ப்பதன் மூலம் பெற்றிருக்கக்கூடிய மகிழ்ச்சியின் இழப்புக்கு சமனாகும்.


05. சமுதாய சந்தைப் பொருளாதாரம் (social market Economy) தொடர்பாக உம்மால் ஏற்கக்கூடியது கூற்றினை தெரிவு செய்க.
   1. ஊழியம் தவிர்ந்த ஏனைய காரணிகள் அரச உடமையாகக் காணப்படும்.
   2. பகுதியளவில் சந்தை சக்திகளாலும் பகுதியளவில் கட்டளைகளாலும் வளஒதுக்கீடு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்.
   3. சந்தைப்பொறியினால் தீர்மானங்களை மேற்கொள்வதோடு சமூக நியாயத்துவத்தில் அதிக அக்கறையோடு செயற்படும்.
   4. விரிவான சமூக வலைப்பின்னலை உருவாக்குவதற்காக அரசாங்கம் உள்நாட்டு நிர்வாகச் செயற்பாட்டில் மட்டுமே தலையிடும்.
   5. இப்பொருளாதாரமைப்பினை முதன்முதலில் ஐக்கிய அமெரிக்காவே தோற்றுவித்தது.

06. இங்கு தரப்பட்டுள்ள வரிப்படம் மூலதனப் பொருட்களையும் நுகர் பொருட்களையும் உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்திச் சாத்திய வளையியைக் காட்டுகிறது. இவ் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள பொருளாதாரம் தனது உற்பத்தி மட்டத்தை X புள்ளியிலிருந்து Y புள்ளிக்கு மாற்றுமாயின்.




   1. மூலதனப் பொருள்களின் 70 அலகுகள் அமயச் செலவினை ஏற்படுத்தும்.
   2. நுகர் பொருள்களின் 250 அலகுகள் அமயச் செலவினை ஏற்படுத்தும்.
   3. வேலையின்மையில் அதிகரிப்பை ஏற்படுத்தும்.
   4. அமயச் செலவினை ஏற்படுத்தமாட்டாது.
   5. நுகர்பொருட்கள் துறையிலிருந்து மூலதனப் பொருட்கள் துறைக்குச் சாதனங்களை மாற்றும்.

07. ஆடை, அரிசி எனும் இரண்டு வகையான பண்டங்களை உற்பத்தி செய்யும் பொருளாதாரமொன்றின் உற்பத்தி சாத்தியவளையி பின்வருமாறு தரப்பட்டுள்ளது. A புள்ளி தொடர்பான மிகவும் சரியான கூற்று எது?




   1. பொருளாதார வினைத்திறனை வெளிப்படுத்தும் ஒரு விசேட புள்ளியாகும்.
   2. நிறைதொழில் மட்டத்தையும் முழு உற்பத்தியையும் வெளிப்படுத்தும்
   3. குறைதொழில் மட்டத்தையும் முழு உற்பத்தியையும் வெளிப்படுத்தும்.
   4. பூச்சிய அமையச்செலவில் அரிசி, ஆடை ஆகிய இரண்டு பண்ட உற்பத்தியையும் அதிகரிக்க முடியும்.
   5. வளஒதுக்கீடு வினைத்திறனையும் பொருளாதார பின்னடைவையும் வெளிப்படுத்தும்.

08. பண்டமொன்றின் கேள்விக்கோட்டினை வரையும்போது எது மாறியாக கருதப்படும்?
   1. நுகர்வோரின் வருமானம்
   2. நுகர்வோரின் அவை
   3. தொடர்புடைய பொருட்களின் விலை
   4. கருத்தில் கொள்ளப்படும் பொருளின் விலை
   5. நுகர்வோரின் எதிர்பார்க்கை

09. நுகர்வோன் வருமானம் வீழ்ச்சியடைந்தபோது X பண்டத்தின் கேள்வி அதிகரித்து அதன் விலையும் அதிகரித்தது எனின் X பண்டம்.
   1. அத்தியவசியப் பண்டமாகும்   2. ஆடம்பரப் பண்டமாகும்   3. இழிவுப் பண்டமாகும்
   4. சாதாரண பண்டமாகும்   5. இணைப்புப் பண்டமாகும்

10. தேங்காய் எண்ணெய்க்கான கேள்விக்கோடு வெளிநோக்கி நகர்ந்துள்ளதாகக் கருதவும் இந்நகர்வுக்கு பொறுப்பான காரணியை இனங்காண்க?
    1. தேங்காய் எண்ணெய் பாவனையாளர்கள் வருமானம் குறைதல்.
    2. தேங்காய் எண்ணெய் பாவனை உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்ற வைத்தியர்களின் ஆலோசனை
    3. மரக்கறி எண்ணெய் சந்தையில் அதன் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி
    4. தேங்காய் எண்ணெய் மீது பாவனையாளர்களின் விருப்பம் குறைதல்.
    5. சூரியகாந்தி எண்ணெய் சந்தையில் அதன் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு.

11. A பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Qd = 800-20p$$
$$Qs = -300+30p$$

சமநிலை விலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் யாது?

1. $+1.22$ 2. $-2.22$ 3. $-1.22$ 4. $-0.81$ 5. $-0.22$

12. X மற்றும் Y ஆகியன நிரப்புப்பொருளாகும். Y பொருளின் நிரம்பலில் ஒரு அதிகரிப்பு ஏற்படுமாயின் X பொருளின் சமநிலை விலை மற்றும் தொகை என்பவற்றில் அதன் விளைவு யாது?

| | **X பொருளின் சமநிலை விலை** | **X பொருளின் சமநிலைத் தொகை** |
|---|---|---|
| 1. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 2. | அதிகரிக்கும் | குறையும் |
| 3. | குறையும் | குறையும் |
| 4. | குறையும் | அதிகரிக்கும் |
| 5. | அதிகரிக்கும் | மாறாது |


13. A என்ற பண்டத்தின் நிரம்பல்சார்பு $Qs_A = 10P_A$ எனத் தரப்பட்டுள்ளது. இப்பண்டத்தின் விலையில் 20 சதவீத அதிகரிப்பு ஏற்படும் போது அதன் நிரம்பல் தொகையானது
    1. 30 சதவீதத்தினால் அதிகரிக்கும்
    2. 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும்
    3. 20 சதவீதத்தினால் அதிகரிக்கும்
    4. 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும்
    5. 15 சதவீதத்தினால் அதிகரிக்கும்

14. X என்ற பண்டத்தின் கேள்விச்சார்பு Qd=800-10P எனவும் நிரம்பல் சார்பு Qs=-100+10P எனவும் தரப்பட்டுள்ளது. X பண்டத்தின் சமநிலையில் பொருளாதார மிகை எவ்வளவாகக் காணப்படும்

1.ரூ.6125 2. ரூ.24500 3. ரூ.10250 4. ரூ.12250 5. ரூ.18375

15. பின்வரும் வரைபடம் Y என்ற பண்டத்தின் மீது சிறப்பு வரி விதிக்கப்பட்டதன் பின்னுள்ள நிலைமையை புலப்படுத்துகின்றது.

வரிவிதிப்புக் காரணமாக உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் மிகைவரிச்சுமையையும் சரியாக காட்டும் விடை




| | **உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட வீழ்ச்சி** | **மிகை வரிச்சுமை** |
|---|---|---|
| 1. | 900 ரூபா | 1350 ரூபா |
| 2. | 3400 ரூபா | 250 ரூபா |
| 3. | 1350 ரூபா | 250 ரூபா |
| 4. | 1350 ரூபா | 900 ரூபா |
| 5. | 900 ரூபா | 250 ரூபா |

16. A பண்டத்தின் கேள்விச்சார்பு Qd = 500 -10p ஆகவும், நிரம்பல் சார்பு Qs = -100+10p ஆகவும் காணப்பட்டது. இப்பண்டத்தின் உற்பத்தியாளர்களுக்கு அரசு அலகொன்றுக்கு 8 ரூபா மானியத்தினை வழங்கும்போது மானியத்தின் பின் விற்பனையாளன் பெறும் விலை என்ன?
1. ரூபா 30 2. ரூபா 26 3. ரூபா 22 4. ரூபா 38 5. ரூபா 34

17. சீரற்ற காலநிலையினால் வாழைப்பழத்தின் அறுவடை வீழ்ச்சியடைந்த போதிலும் வாழைப்பழச் செய்கையாளர்களின் வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. இம்மாற்றத்திற்கு பொருத்தமான காரணி எது?
1. வாழைப்பழத்தின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகக் காணப்படல்
2. வாழைப்பழத்தின் விலைசார் கேள்வி ஒருமையுள்ளதாகக் காணப்படல்
3. வாழைப்பழத்தின் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியுள்ளதாகக் காணப்படல்
4. வாழைப்பழத்தின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியற்றதாகக் காணப்படல்.
5. வாழைப்பழத்தின் விலைசார் கேள்வி பூரண நெகிழ்வுள்ளதாகக் காணப்படல்

18. அரிசிக்கான கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.
Qd = 4000 - 10p Qs = 1000 + 5p
அரசாங்கம் அரிசிக்குரிய உச்ச விற்பனை விலையை ரூபா 80 இலிருந்து 100 ஆக உயர்த்தும்போது மிகைக் கேள்வியில் ஏற்பட்ட மாற்றம் எவ்வளவு?
1. 1800 அலகுகள் 2. 1500 அலகுகள் 3. 3200 அலகுகள்
4. 200 அலகுகள் 5. 300 அலகுகள்

19. தளவிலை (price floor) தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் உண்மையானது எது?
1) தளவிலையானது கேள்வி வளையியை இடப்புறம் நோக்கி நகர்த்தும்.
2) வினைத்திறனான தளவிலையொன்று அப்பொருளின் பற்றாக்குறையை ஏற்படுத்தும்.
3) தளவிலையானது பொருளின் நிரம்பல் வளையியை வலப்புறம் நோக்கி நகர்த்தும்.
4) தளவிலை வினைத்திறனுள்ளதாக அமைய வேண்டுமாயின் அது சமநிலை விலைக்கு மேலாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.
5) சமநிலை விலையினால் சுரண்டப்படும் நுகர்வோருக்கு உதவும் முகமாக அரசாங்கம் தளவிலையினை நிர்ணயிக்கிறது.

20. குறுங்கால உற்பத்தி நிறுவனத்தின் மொத்த உற்பத்தியை பின்வரும் அட்டவணை வெளிப்படுத்துகின்றது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாறும் காரணி (L) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| மொத்த உற்பத்தி (T.P) | 5 | 12 | 22 | 35 | 45 | 50 | 50 | 42 |

இந்நிறுவனத்தின் சராசரி உற்பத்தி வளையியை எல்லை உற்பத்தி வளையி வெட்டும் புள்ளியில் மாறும் உள்ளீடு எவ்வளவாகக் காணப்படும்.
1. 3 2. 6 3. 7 4. 5 5. 4

21. பின்வரும் தகவல்கள் நிறைபோட்டி நிறுவனமொன்றின் குறுங்கால மொத்த மாறும் செலவு அட்டவணையொன்றுக்குரியன ஆகும்.

| **வெளியீடு** | **மொத்த மாறும் செலவு (ரூ.)** |
|---|---|
| 1 | 5 |
| 2 | 20 |
| 3 | 40 |
| 4 | 70 |
| 5 | 110 |
| 6 | 160 |
| 7 | 220 |

5வது அலகு வெளியீட்டின் எல்லைச் செலவு
1) ரூபா 30 ஆகும். 2) ரூபா 40 ஆகும். 3) ரூபா 55 ஆகும்.
4) ரூபா 90 ஆகும். 5) ரூபா 110 ஆகும்.

22. ஒரு நிறுவனம் தனது சகல உள்ளீடுகளையும் 25% இனால் அதிகரித்த போது அதன் வெளியீடு 50% த்தினால் அதிகரித்தது. இந்நிறுவனம் தொடர்பாக நாம் ஏற்றக் கூடியது?
   1. நிறுவனத்தின் சராசரி மொத்தச் செலவுகள் 20% இனால் அதிகரிக்கும்
   2. நிறுவனத்தின் சராசரிச் செலவுகளும் எல்லைச் செலவுகளும் அதிகரிக்கும்
   3. நிறுவனம் பேரளவுச் சிக்கனத்தினைக் கொண்டிருக்கும்
   4. நிறுவனத்தின் சராசரிச் செலவுகள் வீழ்ச்சியடைகின்ற போதிலும் பேரளவு சிக்கனத்தினைக் கொண்டிருப்பதில்லை
   5. நிறுவனம் குறுங்காலத்தில் இயங்குவதோடு பேரளவுச் சிக்கனத்தினையும் கொண்டிருக்கும்

23. பின்வருவனவற்றில் எப்பண்பு நிறுவனமொன்று நிறைபோட்டி நிலைமைகளின் கீழ் இயங்குவதைக் குறித்துக் காட்டுகின்றது?
   1) எல்லைச் செலவு வளையி சராசரிச் செலவு வளையினை அதன் குறைந்த மட்டப்புள்ளியில் வெட்டிச் செல்கிறது.
   2) நிறுவனம் விளம்பரம் செய்வதில்லை.
   3) எல்லைச் செலவு சராசரிச் செலவுக்கு சமப்படுகிறது.
   4) நிறுவனம் எப்போதும் உத்தம வெளியீட்டை மேற்கொள்கிறது.
   5) சாதாரண இலாபம் உழைக்கப்படுகிறது.

24. நிறைபோட்டித் தொழிலில் இயங்கும் நிறுவனமொன்றின் குறுங்கால நிரம்பல்க்கோடு தொடர்பான மிகவும் சரியான கூற்று எது?
   1. எல்லைச் செலவு வளையியாகக் காணப்படும்.
   2. சராசரி மொத்தச் செலவின் (ATC) அதிதாழ்ந்த புள்ளிக்கு மேலேயுள்ள எல்லைச்செலவு வளையியாகக் காணப்படும்.
   3. மொத்த மாறும் செலவு வளையியாகக் காணப்படும்.
   4. சராசரி மாறும் செலவின் அதிதாழ்ந்த புள்ளிக்கு மேலேயுள்ள எல்லைச் செலவு வளையியாகக் காணப்படும்.
   5. எல்லைச்செலவு வளையியின் அதிகரித்துச் செல்லும் பகுதியாகக் காணப்படும்.

25. தனியுரிமை நிறுவனமொன்று தன் மொத்தவருமானத்தை உச்சப்படுத்துவது எக்கேள்வி நெகிழ்ச்சியில்
   1. ஒன்றைவிட பெரிது
   2. ஒன்றைவிடச் சிறிது
   3. ஒன்றுக்கு சமன்
   4. பூச்சியம்
   5. முடிவிலி

26. நிறைபோட்டி நிறுவனமொன்றின் எல்லை வருமானம் ரூபா 35 ஆகவுள்ளது. எல்லை வருமானமும் எல்லைச் செலவும் சமனாகயிருக்கும்போது வெளியீடு 120 அலகுகளாகக் காணப்பட்டது. அவ் வெளியீட்டு மட்டத்தில் சராசரி செலவு ரூபா 40 ஆகவுள்ளது. நிறுவனத்தின் நிலையான செலவு 1200 ரூபாவாகும். இத்தரவுகளின்படி அந்நிறுவனம் என்ன முடிவுக்கு வரும்?
   1. தொழிலிலிருந்து விலகும் தீர்மானத்தை எடுக்கும்.
   2. தொடர்ந்தும் தொழிலில் நீடித்திருக்க விரும்பும்.
   3. அசாதாரண இலாபத்தை உழைப்பதால் தொழிலைவிட்டு நீங்காது.
   4. பூச்சிய சிக்கன இலாபத்தை உழைப்பதால் தொழிலில் நிலைத்திருக்கும்.
   5. உடனடியாக நிறுவனம் தன் உற்பத்தியை நிறுத்தும்.

27. பின்வரும் தரப்பினர்களுள் வீட்டுத்துறையின் கீழ் உள்ளடங்காதவர் யார்?
   1. வைத்தியசாலையிலுள்ள நோயாளர்கள்
   2. முதியோர் இல்லங்களிலுள்ள முதியவர்கள்
   3. சிறைச்சாலையிலுள்ள கைதிகள்
   4. குடும்பநல உத்தியோகத்தர்கள்
   5. முழுநேர இல்லத்தலைவிகள்

28. வர்த்தகச் சகடோட்டத்தின் எந்தக் கட்டம் பெரும்பாலும் அதிகரித்துச் செல்லும் நேர்க்கணிய உற்பத்தி இடைவெளியைக் கொண்டிருக்கும்?
   1. செழிப்பு / பூரிப்பு
   2. பின்னடைவு
   3. விரிவாக்கம்
   4. அதிதாழ்ந்த புள்ளி
   5. சுருக்கம்

29. பின்வருவனவற்றுள் எது தேசிய கணக்குக்குள் உள்ளடக்கப்படும்?
    1. ஓய்வுபெற்ற அரச சேவையாளர்களுக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள்.
    2. தூய நிதி சார் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி.
    3. அரசாங்கத்திடமிருந்து வருமானம் குறைந்த மக்கள் பெற்றுக்கொள்ளும் மானியங்கள்.
    4. அரசாங்கம் தான் பெற்றுக்கொண்ட கடன்களுக்காக செலுத்திய வட்டி
    5. குறித்த வருடத்தில் கட்டப்பட்ட சகல கட்டடங்களின் பெறுமதி.

30. இலங்கையின் கைத்தொழில் பொருளாதார நடவடிக்கைக்குள் உள்ளடங்கும் விடயம் ஒன்று.
    1. தகவல் மற்றும் தொடர்பூட்டல்
    2. பொது நிர்வாகம், கல்வி, பாதுகாப்பு
    3. விலங்கு உற்பத்தி
    4. நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் குளிரூட்டி வழங்கல்
    5. நிதியியல், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துக்கள்.

31. ஒரு நாட்டின் தேசிய கணக்கு தொடர்பான விபரங்கள் வருமாறு. (பெறுமதிகள் யாவும் பில்லியன் ரூபாவில்)

| விடயம் | பெறுமதி |
|---|---|
| தனியார் நுகர்வு | 8000 |
| அரச கொள்வனவுகள் | 4000 |
| மொத்த உள்நாட்டு மூலதனாக்கம் | 5000 |
| நிலையான மூலதன நுகர்வு | 200 |
| தேறிய ஏற்றுமதிள் | -2000 |

இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம் எவ்வளவாகக் காணப்படும்?
1. 20%   2. 25%   3. 24%   4. 15%   5. 30%

32. எளிய பொருளாதாரத்தில் வருமானத்திலேற்படும் ரூ. 6,000 அதிகரிப்பு சேமிப்பை ரூ. 2,000 ஆல் அதிகரிப்பதாகக் கருதுக. அப்படியாயின் வருமானப் பெருக்கியின் பெறுமதி என்ன?

1. 1.33   2. 3.33   3. 2.0   4. 2.5   5. 3.0   ஆகவிருக்கும்

33. பின்வருவனவற்றுள் எது உண்மையற்றது?
1. Y = C + 1 + G + X – M
2. I + G + X = S + T + M
4. Y = C + I + G + NX (NX = தேறிய ஏற்றுமதிகள்)
4. Y + M = C + I + G + X
5. Y = C + I + G – T + X - M

34. ஒரு எளிய பொருளாதாரத்தின் செலவிடத்தக்க தேசிய வருமானம் 10000 ரூபாவிலிருந்து 15000 ரூபாவாக அதிகரித்த போது நுகர்வுமட்டம் 8000 ரூபாவிலிருந்து 12000 ரூபாவாக அதிகரித்தது. இப் பொருளாதாரத்தின் முதலீடு 75 ரூபாவால் அதிகரித்த போது சமநிலைத் தேசிய வருமானம் எவ்வளவால் அதிகரிக்கும்.
1. ரூபா 300   2. ரூபா 500   3. ரூபா 375   4. ரூபா 225   5. ரூபா 675

35. பின்வரும் தகவல்கள் உமக்கு வழங்கப்பட்டுள்ளன. (தரவுகள் அனைத்தும் ரூபா மில்லியன்களில் ஆகும்).
சேமிப்புக்கள் = 500   முதலீடுகள் = 450   தேறிய வரிகள் = 250   இறக்குமதிகள் = 200
மொத்த அரசாங்கச் செலவீடு = 200   ஏற்றுமதிகள் = 350
இத்தகவல்களுக்கு அமையச் சரியான கூற்று எது?
    1. மொத்த வெளியீடு அதிகரிக்கும், பாதீடு மிகை நிலையிலிருக்கும்.
    2. மொத்த வெளியீடு அதிகரிக்கும், பாதீடு பற்றாக்குறையாகவிருக்கும்.
    3. மொத்த வெளியீடு குறையும், பாதீடு மிகைநிலையிலிருக்கும்.
    4. மொத்த வெளியீடு குறையும், பாதீடு பற்றாக்குறையாகவிருக்கும்.
    5. மொத்த வெளியீடு மாற்றமடையாது.

36. பின்வருவனவற்றில் எது மொத்தக் கேள்வியில் பெரும்பாலும் அதிகரிப்பொன்றை ஏற்படுத்தவல்லது?
   1. சேமிப்புக்களில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
   2. இறக்குமதிகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
   3. அரச வரிவருமானத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
   4. குடித்தனத்துறைக்குரிய அரசமாற்றல் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டமை.
   5. வட்டி வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

37. ஒரு பொருளாதாரம் தற்போது ரூபா 6000 பில்லியன் சமநிலை வெளியீட்டு மட்டத்தில் இயங்குவதாகவும் அதன் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 எனவும் கொள்க. இப்பொருளாதாரத்தின் நிறைதொழில் வெளியீட்டு மட்டச் சமநிலை ரூபா 7500 பில்லியன் ஆயின், பின்வரும் கொள்கைத் தீர்வுகளில் எது நிறைதொழில்மட்டம் எய்தப்படுவதை உறுதி செய்யும்?
   1. வரிகளை ரூபா 200 பில்லியனால் குறைத்தல்.
   2. அரசாங்கச் செலவீடுகளை ரூபா 1500 பில்லியனால் அதிகரித்தல்.
   3. அரசாங்கச் செலவீடுகளை ரூபா 375 பில்லியனால் அதிகரித்தல்.
   4. வரிகளை ரூபா 300 பில்லியனால் குறைத்தல்.
   5. வரிகளை ரூபா 375 பில்லியனால் குறைத்தல்.

38. அண்மிய பணத்திற்கு (near money) மிகவும் பொருத்தமான உதாரணம்
   1. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலுள்ள பொதுமக்களின் பெயரிலுள்ள கேள்வி வைப்புக்கள்
   2. அரசாங்கம் உள்நாட்டில் சந்தைக்கடன்களைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தும் திறைசேரி முறிகள்
   3. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் பொதுமக்களின் பெயரிலுள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்.
   4. வர்த்தக வங்கிகளின் பெயரில் மத்திய வங்கியுள்ள வைப்புக்கள்
   5. பொதுமக்கள் வசமுள்ள தாள், உலோக நாணயங்கள்

39. பணத்தின் உத்தேச நோக்கக் கேள்விக்கு அடிப்படையான பணத்தின் தொழிற்பாடு எது?
   1. பரிமாற்று ஊடகம்
   2. பெறுமானத் திரட்டு
   3. பெறுமானத்தை அளவிடும் அளவுகோல்
   4. கணக்கீட்டு அலகு
   5. பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமம்

40. ஒரு நாட்டின் பண நிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பு பின்வருவனவற்றுள் எந்த விளைவினை ஏற்படுத்தும்?
   1. பணத்தின் உத்தேச நோக்கம் கேள்வியை குறைக்கும்
   2. முதலீடுகளை அதிகரித்து மொத்தக் கேள்வியை குறைக்கும்
   3. வட்டி வீதத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தி முதலீட்டினையும் அதிகரிக்கும்.
   4. பணத்தின் கொள்வனவு சக்தியை அதிகரிக்கும்.
   5. வட்டி வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தி முதலீட்டினை அதிகரிக்கச் செய்யும்

41. ஒரு பொருளாதாரத்தின் பண நிரம்பல் 20 சதவீதத்தால் அதிகரித்தது. கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பணச் சுற்றோட்ட வேகத்தில் எந்த மாற்றமும் நிகழவில்லை எனக் கொண்டால் இப்பொருளாதாரத்தின் பொது விலைமட்டத்தில் ஏற்பட்ட அண்ணளவான அதிகரிப்பு வீதம் யாது?
   1. 20 சதவீதத்தால்
   2. 10 சதவீதத்தால்
   3. 60 சதவீதத்தால்
   4. பூச்சிய வீதத்தால்
   5. 40 சதவீதத்தால்

42. பின்வருவனவற்றில் எது செலவுத்தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தும்
   1. வேலையில்லாப் பிரச்சனை குறைதல்
   2. வணிக வங்கிகளின் நுகர்வுக்கடன் வழங்கலை அதிகரித்தல்
   3. மத்திய வங்கி பிணையங்களை விற்பனை செய்தல்
   4. மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கான ஒதுக்குத் தேவையினைக் குறைத்தல்
   5. தொழிற்சங்க போராட்டத்தினால் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு

43. பின்வருவனவற்றுள் எதனை பணவீக்கத்தின் பொருளியல் செலவாகக் கருதுவீர்?
   1. பணத்தின் கொள்வனவு சக்தியை அதிகரிக்கும்
   2. கடன் கொடுத்தோரின் மெய்வருமானம் அதிகரிக்கும்
   3. நிலையான வருமானம் பெறுவோரின் மெய்வருமானம் அதிகரிக்கும்
   4. ஏற்றுமதிகளின் போட்டித்தன்மைக்கு தடைகள் ஏற்படும்
   5. சேமிப்போர் ஊக்கமடைவர்

44. பின்வரும் கூற்றுகளுள் எது நாணயக்கொள்கையினை சரியாக வரைவிலக்கணப்படுத்துகிறது?
   1. விலைகளையும் வருமானங்களையும் நேரடியாகக் கட்டுப்படுத்துதல்.
   2. வரியிடலையும் அரசாங்க செலவீட்டையும் கட்டுப்படுத்துதல்
   3. வட்டி வீதங்களையும் பணநிரம்பலையும் கட்டுப்படுத்துதல்
   4. அரசாங்கப் பாதீட்டை முகாமை செய்தல்.
   5. வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

45. இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் நாணயக் கொள்கையின் இறுதிக்குறிக்கோள் யாது?
   1. வருமான ஏற்றத்தாழ்வை நீக்குதல்
   2. விலை உறுதியைப் பேணுதல்
   3. நிதியியல் முறை உறுதியைப் பேணுதல்
   4. உள்ளக வெளியகச் சமநிலையை பேணுதல்
   5. விலை மற்றும் பொருளாதார உறுதியை பேணுதல்

46. மத்திய வங்கியானது பிணையங்களைக் (securities) கொள்வனவு செய்யும் நடவடிக்கையானது பணநிரம்பல் மற்றும் வட்டி வீத மட்டத்தில் ஏற்படுத்தும் தாக்கம் என்னவாக இருக்கும்?

| பணநிரம்பலின் மீதான தாக்கம் | வட்டிவீதத்தின் மீதான தாக்கம் |
|---|---|
| 1. அதிகரிப்பு | அதிகரிப்பு |
| 2. அதிகரிப்பு | வீழ்ச்சி |
| 3. வீழ்ச்சி | அதிகரிப்பு |
| 4. வீழ்ச்சி | வீழ்ச்சி |
| 5. மாறாதிருக்கும் | அதிகரிப்பு |

47. பின்வரும் வணிக வங்கிகளின் சொத்துக்களில் கூடிய திரவத்தன்மையைக் கொண்ட சொத்து எது?
   1. வங்கியில் வழங்கப்பட்ட கடன்கள்
   2. திறைசேரி உண்டியல்கள்
   3. வியாபார உண்டியல்கள்
   4. அடகு முற்பணங்கள்
   5. மத்திய வங்கியிலுள்ள வைப்புக்கள்

48. வணிக வங்கிக் கட்டமைப்பிலுள்ள வர்த்தக வங்கியொன்றில் நீர் ரூபா 2000 ஐ கேள்வி வைப்பிலிடுவதாகக் கருதுக. வங்கி சகல வைப்புகளின் மீது 20% ஒதுக்கு வீதத்தினை பேணுவதாகக் கருதுக. உமது கேள்வி வைப்பில் நேரடி விளைவாக இவ் வங்கியினால் உருவாக்கப்பட்ட புதிய வைப்புகளின் அளவு யாது?
   1. ரூபா 2000
   2. ரூபா 4000
   3. ரூபா 1600
   4. ரூபா 8000
   5. ரூபா 10000

49. பின்வரும் பண்டத் தொகுதிக்குள் பொதுப் பண்டத்தினை சரியாக வெளிப்படுத்தும் விடை எது?
   1. வீதி வெளிச்சம், சூழல் பாதுகாப்பு, தாவரவியல் பூங்கா
   2. வீதிச்சமிக்ஞை, மணிக்கூட்டு கோபுரம், மின்சார புகையிரதம்
   3. வானிலை எதிர்வுகூறல், அறிவு உருவாக்கம், மேம்பாலங்கள்
   4. தேசிய பாதுகாப்பு, மணிக்கூட்டு கோபுரம், அறிவு உருவாக்கம்
   5. சூழல் பாதுகாப்பு, போக்குவரத்து பாதைகள், வீதி வெளிச்சம்

50. 2019ம் ஆண்டு இலங்கை மத்திய அரசாங்கத்தின் வரி வருவாய்களின் மிக முக்கிய மூலாதாரமாக விளங்கியது
   1. வருமான வரி
   2. கலால் தீர்வை
   3. இறக்குமதித் தீர்வை
   4. பெறுமதிசேர் வரி
   5. தேசத்தை கட்டியெழுப்பும் வரி

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் II<br>Economics II | Three Hours and ten minutes<br>Gr -13 (2021) | 21 | T | II |

### பகுதி II

**அறிவுறுத்தல்** : உப பிரிவு "**அ**", "**ஆ**" ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

### உப பகுதி - 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

01. (i) அமையச்செலவு என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? உற்பத்தியில் அமையச்செலவு பூச்சியமாகக் காணப்படும் சந்தர்ப்பங்களையும் குறிப்பிடுக?

(04 புள்ளிகள்)

(ii) இயற்கை வளம், இலவசப் பண்டம் என்பவற்றை வேறுபடுத்துக?

(04 புள்ளிகள்)

(iii) வளங்களின் விளைதிறன் என்றால் என்ன? ஒரு நாடு தன்னிடமுள்ள வளங்களின் விளைதிறனை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

(04 புள்ளிகள்)

(iv) சமூக சந்தைப் பொருளாதாரம் (Social Market Economy) என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(04 புள்ளிகள்)

(v) "ஒரு சமூகத்தின் நிகழ்கால நுகர்வின் தியாகத்தின் அளவிலேயே அச் சமூகத்தின் எதிர்கால பொருளாதார வளர்ச்சி வீதம் தங்கியிருக்கும்" இக் கூற்றின் நடைமுறைப் பொருத்தப்பாட்டினை பொருத்தமான வரைபடங்களை பயன்படுத்தி விளக்குக?

02. (i) கேள்விவிதி என்றால் என்ன? அவ்விதிக்கு அடிப்படையாகவுள்ள இரண்டு விடயங்களையும் குறிப்பிட்டு அவற்றை விளக்குக?

(04 புள்ளிகள்)

(ii) சாதாரணபண்டம், இழிவுப்பண்டம் மற்றும் கிபன் பண்டம் ஆகியவற்றை வேறுபடுத்துக?

(04 புள்ளிகள்)

(iii) அ) நிரம்பல் நீட்டத்திலிருந்து நிரம்பல் அதிகரிப்பு எவ்வாறு வேறுபடுகின்றது.

(02 புள்ளிகள்)

ஆ) கைத்தொழில் பண்டமொன்றின் நிரம்பல் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு காரணிகளை குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(iv) நுகர்வோனின் வருமானம் 20%த்தால் அதிகரித்த போது X, Y, Z பண்டங்களின் கேள்வி முறையே 10%த்தால் வீழ்ச்சியடைந்தது, 30%த்தால் அதிகரித்து, 15%த்தால் அதிகரித்தது எனக்கருதுக?

அ) X,Y,Z பண்டங்களின் வருமான கேள்வி நெகிழ்ச்சியை கணிப்பிடுக? (02 புள்ளிகள்)

ஆ) X,Y,Z பண்டங்களின் தன்மையை குறிப்பிடுக? (02 புள்ளிகள்)

(v) X என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$Qd = 200 – 5p$

$Qs = -50 + 5p$

P = விலை ரூபாவில், Q = தொகை அலகுகளில் தரப்பட்டுள்ளது. இப்பண்டத்தின் கேள்வியானது எல்லா விலைகளிலும் 100 அலகுகளால் அதிகரிப்பதாகக் கருதவும்.

அ) புதிய சமநிலை விலை, தொகை யாது? (02 புள்ளிகள்)

ஆ) புதிய சமநிலை விலையில் உற்பத்தியாளன் மிகை எவ்வளவு? (02 புள்ளிகள்)

03. (i) X என்ற பண்டத்தின் நிரம்பல் சார்பு $Qs = -100 +10p$ எனத் தரப்பட்டுள்ளது. இப்பண்டத்தின் விற்பனை மீது அலகுக்கு ரூபா 20 சிறப்பு வரியாக விதிக்கப்படுவதாகக் கருதவும். பின்வரும் விலைகளில் வரிக்கு முன்னும், வரிக்கு பின்னுள்ள நிரம்பல் தொகையை பதிவு செய்க.

விலை (P) = 160 140 120 100 80 60 40 20

(04 புள்ளிகள்)

(ii) X பண்டத்தின் சந்தைக் கேள்வி சார்பு $Qd = 900 - 10p$ எனத் தரப்பட்டுள்ளது. வினா (i) இலுள்ள நிரம்பல் சார்பினைக் கருத்தில் எடுத்து இப்பண்டத்தின் உற்பத்தியாளர்களுக்கு அரசு அலகுக்கு ரூபா 10ஐ மானியமாக வழங்கும் போது,

அ) சமநிலை விலை, தொகை எவ்வளவாகக் காணப்படும்? (02 புள்ளிகள்)

ஆ) நுகர்வோர் மிகை, தேறிய சமூகநல இழப்பு எவ்வளவாகக் காணப்படும். (02 புள்ளிகள்)

(iii) **உச்ச விற்பனை விலை** என்றால் என்ன? அரசாங்கம் உச்ச விற்பனை விலையை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(iv) விவசாய விளைபொருட்களின் விலைசார் கேள்விநெகிழ்ச்சியும், விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியும் ஒன்றைவிட சிறியதாகக் காணப்படுவதற்குரிய காரணங்களை தனித்தனியாக விளக்குக.

(04 புள்ளிகள்)

(v) அரசாங்கம் நெல் உற்பத்தியாளர்களுக்கு ஆதரவை வழங்கும் நோக்கில் உத்தரவாத விலையை தீர்மானித்து அவ்விலையிலுள்ள மிகை நிரம்பலை தானே கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளது. இந்நடவடிக்கையின் விளைவுகளை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

(04 புள்ளிகள்)

04. (i) குறைந்து செல்லும் எல்லை விளைவு, குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு ஆகிய இரண்டும் நிறுவனமொன்றின் செலவுகளை எவ்வாறு பாதிக்கும் என்பதனை விளக்குக.
(04 புள்ளிகள்)

(ii) எல்லைச்செலவு, சராசரி மொத்தச் செலவு என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை விளக்குக?
(04 புள்ளிகள்)

(iii) போட்டித் தன்மையின் அடிப்படையில் (உயர் நிலையிலிருந்து தாழ் நிலை வரை) சந்தை அமைப்புக்களை பெயரிடுக.
(04 புள்ளிகள்)

(iv) நிறைபோட்டி நிறுவனமொன்று X என்ற பண்டத்தினை ரூபா 50 விலையில் 400 அலகுகளை விற்பனை செய்கின்றது. அந்நிறுவனத்தின் மொத்தச் செலவு 25000 ரூபாவாகும். அந்நிறுவனத்தின் வெளியீடு பூச்சியமாகவுள்ள போது மொத்தச் செலவு 6000 ரூபாவாகும் எனவும் கருதுக. இந்நிறுவனம் தொடர்ந்தும் X பண்டத்தினை நிரம்பல் செய்ய முடியுமா? விளக்குக?
(04 புள்ளிகள்)

(v) பொருளியல் இலாபத்திலிருந்து உற்பத்தியாளர் மிகை எவ்வாறு வேறுபடுகின்றது.
(04 புள்ளிகள்)

05. (i) “வர்த்தக சகடவோட்டம்” என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதிலுள்ள நான்கு கட்டங்களையும் சுருக்கமாக விளக்குக?
(04 புள்ளிகள்)

(ii) கூட்டிய பெறுமதி எனும் எண்ணக்கருவிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?
(04 புள்ளிகள்)

(iii) தேசிய கணக்கீட்டில் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படை விலை, கொள்வனவாளர் விலை ஆகியவற்றை வேறுபடுத்துக?
(04 புள்ளிகள்)

(iv) ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானத்திலிருந்து தனி நபர் வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்காக கழிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை?
(04 புள்ளிகள்)

(v) ஒரு நாட்டின் தேசிய கணக்கு தொடர்பான புள்ளிவிபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. (பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| • தனியார் நுகர்வு | 8000 |
| • பொது நுகர்வு | 7000 |
| • மொத்த உள்நாட்டு மூலதனாக்கம் | 4000 |
| • இருப்பு மாற்றம் | 200 |
| • பொருட்களின் தேறிய ஏற்றுமதி | -2200 |
| • பொருட்களின் இறக்குமதி | 6700 |
| • தேறிய நேரில் வரி | 600 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மைவருமானம் | - 400 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறைமாற்றல்கள் | 600 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக

அ. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி. (2 புள்ளிகள்)
ஆ. செலவிடத்தக்க தேசிய வருமானம். (2 புள்ளிகள்)

## உபபகுதி "ஆ"

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

06. (i) பேரினப் பொருளியல் சமநிலைக்குரிய நிபந்தனைகளை பொருத்தமான வரைபடங்கள் மூலம் விளக்குக.

(04 புள்ளிகள்)

(ii) எளிய பொருளாதாரத்தில் "முதலீட்டுப் பெருக்கி" எவ்வாறு கணிக்கப்படுகின்றது?

(04 புள்ளிகள்)

(iii) பொருளாதாரமொன்றின் பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகளைக் கருத்திற் கொள்க.

$C = 100 + 0.8Y_D$ $I = 150$ $G = 200$ $T = 100$ $Tr = 50$

$Y_D$ = செலவிடத்தக்க தேசிய வருமானம் C = நுகர்வு I = முதலீடு

G = அரசாங்கக் கொள்வனவுகள் T = வரிகள் Tr = மாற்றல்கள்

அ) சமநிலைத் தேசிய வருமான மட்டம் யாது? (02 புள்ளிகள்)

ஆ) முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது? (02 புள்ளிகள்)

(iv) கருதுகோள் பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் வருமாறு?

| | | |
|---|---|---|
| மொத்த தேசிய வருமானம் | (Y) | = 8000 பில்லியன் ரூபா |
| செலவிடத்தக்க தேசிய வருமானம் | ($Y_d$) | = 7400 பில்லியன் ரூபா |
| தனியார் நுகர்வு | (C) | = 7100 பில்லியன் ரூபா |
| அரச பாதீட்டுப் பற்றாக்குறை | ($B_D$) | = 200 பில்லியன் ரூபா |
| அரச நடப்பு மாற்றல்கள் | ($T_R$) | = 50 பில்லியன் ரூபா |
| வர்த்தக மீதி | (TB) | = -300 பில்லியன் ரூபா |

இப் பொருளாதாரத்தின்

அ) அரசின் வரி வருமானம் (T) (02 புள்ளிகள்)

ஆ) தனியார் முதலீடு (I) (02 புள்ளிகள்)

எவ்வளவாகக் காணப்படும்?

(v) வீக்க இடைவெளி, சுருக்க இடைவெளி என்பவற்றை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

(04 புள்ளிகள்)

07. (i) சட்டப்பணம், வங்கிப்பணம் மற்றும் அண்மிய பணம் ஆகியவற்றை வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

(ii) ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_2b$) என்றால் என்ன? அதனைத் தீர்மானிக்கும் காரணிகளையும் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(iii) கேள்வித்தூண்டல் பணவீக்கம், செலவுத்தூண்டல் பணவீக்கம் என்பவற்றை வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

(iv) ஒரு நாட்டின் பணநிரம்பல் 10% அதிகரிப்பு ஏற்படும் போது கட்டாயமாக பொது விலைமட்டத்திலும் 10% அதிகரிப்பு ஏற்படுமா? உமது விடையை தெளிவுபடுத்துக?

(04 புள்ளிகள்)

(v) மைய பணவீக்கம் (Core Inflation) என்றால் என்ன? அப்பணவீக்கத்தினை மதிப்பீடு செய்வதன் நோக்கங்களையும் விளக்குக?

(04 புள்ளிகள்)

08. (i) இலங்கை மத்திய வங்கியின் பிரதான தொழிற்பாடுகள் யாவை?

(04 புள்ளிகள்)

(ii) இலங்கை மத்திய வங்கி கையாளுகின்ற கொள்கை வட்டி வீதங்களை குறிப்பிட்டு அவ்வீதங்களை மத்திய தற்போது குறைத்தமைக்குரிய நோக்கங்களையும் தெளிவுபடுத்துக?

(04 புள்ளிகள்)

(iii) உரிமம் பெற்ற வர்த்தக வங்கி என்றால் என்ன? அதன் நோக்கங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் பணநிரம்பல் (M) 5000 பில்லியனாகவும் மொத்த வங்கி வைப்புக்கள் (D) 3600 பில்லியனாகவும் நியதி ஒதுக்கு வீதம் 10% ஆகவும் இருப்பதோடு வங்கிகளில் மிகை ஒதுக்குகள் எதுவும் இல்லை எனக் கருதுக.

அ) பணப்பெருக்கியின் பெறுமதி என்ன? (02 புள்ளிகள்)

ஆ) மத்தியவங்கி அரசுக்கு வழங்கிய கடன்களை 40 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கும் போது பணநிரம்பலுக்கு யாது நிகழும்? (02 புள்ளிகள்)

(v) வங்கி முறைமையொன்றின் கருதுகோள் ரீதியான இருப்பு நிலைக்குறிப்பு கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது.

| பொறுப்புக்கள் (ரூபா பில்லியன்) | சொத்துக்கள் (ரூபா பில்லியன்) |
|---|---|
| கேள்வி வைப்புக்கள் 10,000 | ஒதுக்குகள் 2500 |
| | கடன்கள் 7500 |
| 10,000 | 10,000 |

இவ்வங்கி முறைமையின் நியதி ஒதுக்கு தேவை 0.1 எனக் கருதுக. இப் பொருளாதாரத்தில் பொதுமக்கள் வசமுள்ள காசின் அளவு 15000 பில்லியன் ரூபாவாகும் எனக் கொள்க.

அ) இவ் வங்கிக் கட்டமைப்பின் நியதி ஒதுக்கு மட்டம், மிகை ஒதுக்கு மட்டம் எவ்வளவாகக் காணப்படும். (02 புள்ளிகள்)

ஆ) பொதுமக்கள் தம் கைவசமுள்ள நாணயத்தில் 200 பில்லியன் ரூபாவை வங்கிக்கட்டமைப்பில் வைப்பிலிருவதாகக் கருதுக. பூரண கடனாக்கத்தின் பின் பண நிரம்பல் எவ்வளவாகக் காணப்படும்? (02 புள்ளிகள்)

09. (i) சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தொழிற்பாடுகள் யாவை?

(04 புள்ளிகள்)

(ii) "சந்தைத் தோல்வி" என்றால் என்ன? அதற்குரிய நான்கு காரணிகளை குறிப்பிடுக?

(04 புள்ளிகள்)

(iii) பொதுப்பண்டம் என்றால் என்ன? அதற்குரிய நான்கு உதாரணத்தினையும் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(iv) "அரைகுறைப் பொதுப்பண்டம்" என்றால் என்ன? இப்பண்டம் எவ்வாறு சந்தைத் தோல்விக்கு காரணமாகும் என்பதனைத் தெளிவுபடுத்துக.

(04 புள்ளிகள்)

(v) நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு என்றால் என்ன? தனிநபர் ஒருவர் நேர்க்கணிய வெளிவாரி விளைவை ஏற்படுத்தும் நுகர்வில் ஈடுபடும் போது ஏன் வள ஒதுக்கீட்டில் வினைத்திறன் ஏற்படுவதில்லை என்பதனை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

(04 புள்ளிகள்)

10. (i) சிறந்த வரியொன்றில் காணப்படும் பண்புகளைக் குறிப்பிட்டு அதிலொன்றை சுருக்கமாக விளக்குக?

(04 புள்ளிகள்)

(ii) வரியின் மிகைச்சுமை (Excess Burden of taxation) என்பதனால் கருதப்படுவதென்ன? வரியின் மிகைச்சுமை பூச்சியமாகக் காணப்படும் சந்தர்ப்பம் ஒன்றினை பொருத்தமான வரைபடத்தின் மூலம் வெளிப்படுத்துக.

(04 புள்ளிகள்)

(iii) இலங்கை அரசாங்கத்தின் வரியில்லாத வருமான மூலங்கள் நான்கினைப் பெயரிடுக.

(04 புள்ளிகள்)

(iv) அரசாங்கத்தின் நடைமுறைச் செலவின் கூறுகளை குறிப்பிட்டு இலங்கை அரசாங்கம் தன் நடைமுறைச் செலவினை குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் தெளிவுபடுத்துக?

(04 புள்ளிகள்)

(v) அரசின் மூலதனச் செலவு என்றால் என்ன? அதன் முக்கியத்துவங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)